RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2641

Women's Voices and Emotional Experiences in the Akam Poems of Sangam Avvai

M. Sindhu [a, *]

[a] Department of Tamil, Dr.N.G.P. Arts and Science College, Coimbatore-641048, India

*Corresponding author Email: sindujasms@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2641

Received: 06-07-2026; Revised: 16-10-2026; Accepted: 22-10-2026; Published: 31-10-2026

Abstract: The name Avvai occupies a significant yet complex position in the history of Tamil literature, as several women poets from different historical periods are associated with this name. This has led to scholarly discussions concerning their identities, historical contexts, and literary contributions. In contemporary literary studies, where feminist criticism has brought renewed attention to women's experiences and representation, examining the linguistic and intellectual traditions of Sangam Avvai provides an important opportunity to understand the development of women's voices and perspectives in early Tamil literature. Her poetry offers valuable insights into the representation of female subjectivity and women's social position within the historical and cultural context of the Sangam period. This study examines the representations of women's status and experiences in the akam poems attributed to Sangam Avvai. Of the 59 poems attributed to her, the study focuses on the 26 poems identified with the akam tradition. Adopting a feminist literary perspective, it analyses how women's inner emotions, love experiences, psychological responses, interpersonal relationships, and domestic responsibilities are represented in these poems. Particular attention is given to the ways in which female characters express their desires, negotiate emotional relationships, and experience their positions within the domestic sphere. The study also considers how Avvai's poetic language and narrative perspectives contribute to the articulation of women's voices within the conventions of akam poetry. The study argues that the akam poems of Sangam Avvai provide significant insights into women's emotional worlds and their lived experiences within domestic and social structures. Through the representation of female subjectivity, the poems reveal the complexity of women's positions in Sangam society and demonstrate the importance of women's poetic voices in understanding early Tamil gender relations. Thus, this study highlights the contribution of Sangam Avvai's poetry to the literary history of women's expression, identity, and social experience.

Keywords: Avvai aval, Akam tradition, Avvai's poetic language, Sangam society, Women's social position

Language: **Tamil**

அவ்வையின் அகப்பாடலில் பெண் நிலைப் பதிவுகள்

மு. சிந்து [அ, *]

[அ] தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641048,

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'அவ்வை' பல்வேறு காலகட்டகங்களில் பல்வேறு படைப்புகளின் ஆசிரியராக இருப்பதால் அவ்வை பெயர் வரலாற்றில் குழப்பம் நிகழ்கிறது. காரணம் அவரவர் தம் வாழ்ந்த காலத்து மெய் நிகழ்வுகளைப் படைப்பு வழி இனம் காணுவதால் ஆகும். இருப்பினும் 'பெண்நிலை' குறித்து பெண்ணியத் திறனாய்வுகள் முதன்மைப்பட்ட இன்றைய நிலையில், சங்ககால அவ்வையின் மொழி மரபு, சிந்தனை மரபு பற்றி அறிவதன் மூலம் 'பெண் மொழி' குறித்த வரையறையும் வரலாற்று நிலையில் பெண் நிலைப்பாட்டையும் பதிவு செய்தவதற்கு ஏதுவாகும். அவ்வகையில் சங்க அவ்வை குறித்த செய்திகளையும் அவர் எழுதிய 59 பாடல்களுள் அகம் பற்றி பேசுபவனாக அறியப்படும் 26 பாடல்களில் பெண்ணின் மன உணர்வுகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இல்லற வெளியில் பெண் நிலையைப்பதிவு செய்த விதத்தை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஔவை (அவ்வை) -பெயர்ப் பொருள்

இலக்கியத்தில் அவ்வை பெயர் குறித்த பதிவு பின்வருமாறு.

"அவ்வைக்கு மூத்த மாமன் - சீவக சிந்தாமணி 1046)

தவ்வை படுதுயர்கண்டு - சிலம்பு (15:80)

அவ்வை உயிர் வீவும் கேட்பியே தோழி - சிலம்பு (29:5:4)

அவ்வை மகள் இவள்தான் அம்மணம் பட்டிலா - சிலம்பு (29:8:3)

அம்ம வாலி பாண எவ்வைக்

செவன்பெரி தளிக்கு மென்ப (ஐங் 89:1:2)

நும்மினும் சிறந்தது நுவ்வையாரும் (நற் 172)

அவ்வை தாய் என்ற நிலையில் முதியோர் என்று கொள்ளுதல் வேண்டும் என்று தாயாம்மாள் அறவாணன் குறிப்பிடுகிறார். “அவ்வை” என்னும் சொல் காலம் தோறும் “மூதாட்டி” என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது (Seenivasan, 2000; Sellappan, 1994; Sadasiva Iyer, 1999; Parimanam & Balasubramaniyam, 2004).

அவ்வையும் அகப்பாடல்களும்

அவ்வையின் அகப்பாடல்கள் எளிமையும் அழகும் ஒருங்கமைந்தனவாக உள்ளன. கூற்று அடிப்படையில் ஏறத்தாழ 22 பாடல்கள் மீதம் நான்கில் 3 தலைவன் கூற்றாகவும் கண்டோர் கூற்றாக ஒன்றும் அமைந்திருப்பதால் பெரும்பாலும் பெண்ணின் மன உணர்வுகளைப் பதிவு செய்துள்ளன எனத் துணியலாம். 'மையக்கருத்து' அடிப்படையில் நோக்குகையில் அப்பாடல்கள் பெண்ணின் காம உணர்வை அழுத்தமாய் பதிவு செய்துள்ளன எனலாம். உவமை கூறும் அவ்வுணர்வுக்கு ஏற்ப மிகப்பொருத்தமாக அமைந்து புறப்பாடல்களின் சிறப்பிற்கு ஈடாக அமைந்துள்ளன.

நற்றிணையில் 7, குறுந்தொகையில் 15, அகநானூற்றில் 4 என ஆக மொத்தம் 26 அகப்பாடல்களை இவர் பாடியுள்ளார். இவற்றை அகப்பிரிவின் அடிப்படையில் களவு பாடல்கள் 8, கற்பு பாடல்கள் 18 என வகைப்படுத்தலாம்.

அதனடிப்படையில் அவ்வையாரின் பல பாடல்கள் பெருந்திணை வயப்படுவன என வ.சுப. மாணிக்கம் குறிப்பிடுகின்றார். இவர் "பெருந்திணையின் நான்கு துறைகளுள் ஒன்று தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்" என்பது தலைவியின் காமம் ஒரு தலைக் கொருகால் பெருகிச் செல்வதன்றி தணிவதில்லை. ஊரெல்லாம் அறிந்து பேசும் படிக்கு அவள் காமம் வெளிப் படையாகும் என்ற அகநானூற்று (273)ம் பாடல் மையமிட்டுத்தன் கருத்தை வலியுறுத்துகின்றார்.

நடப்பியல் முழுவதுமாக அமைதல்

அவ்வை தம் அகப்பாடல்களில் பெண் தனக்குரிய பண்புகளையும் தலைவன் கூடுங்கால் பெரும் இன்பமும் தலைவன் பிரிவால் தானுறும் துன்பமும் தலைவன் கூட இருக்கும் போது தலைவியின் நிலையினை முழுமையாக நடப்பியல் சார்ந்து பதிவு செய்துள்ளார்.

“தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்

எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை" (தொல்.பொருள்.களவு-116)

தன் உள்ளத்து உணர்வுகளைக் கூறும் உரிமை ஆண்களுக்கு மட்டும் உண்டு. பெண்களுக்கு இல்லை என்ற இலக்கிய மரபிலிருந்து மாற்றும் மரபை முன்வைப்பவராக அவ்வையை இனம்காண முடிகிறது (Ganesaiyar, 2010). இதனை அவ்வை தனக்கானதாக (பெண்களுக்காக) காம உணர்வின் இயல்பு குறித்தும் அதனால் ஏற்படும் பெண்ணின் உடல் மாற்றம் (பசலைநோய்) குறித்தும் பதிவு செய்தும் கருத்துக்களால் அறியமுடிகிறது.

"முட்டுவென் கொல் தாங்குவேன் கொல்

ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

ஆ! ஓல் எனக் கூவுவேன் கொல்" (குறுந் - 28)

தலைவி இரவு நேரத்தில் வீசும் தென்றல் காற்று வருத்துவதினால் ஊரே உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் தான் மட்டும் உறங்காது தன்னந்தனியே தனித்திருப்பதை இப்பாடல் உள்ளவாறு புனைந்து சொல்நடையுடன் அவ்வையால் பதிவு செய்யப்பட்டுள்ளது (Nagarajan, 2017).

"நம்மனத் தன்ன மென்மை யின்மையின்

நம்முடை யுலக முள்ளார் கால்லோ

யாங்கென வுணர்கோ யானே வீங்குபு

தலைவரம் பறியாத் தகைவரல் வாடையோடு

முலையிடத் தோன்றிய நோய்வளரிளமுளை

அசைவுடை நெஞ்சத் துயவுத்திற னீடி

ஊரொ ரெடுத்த வம்ப லஞ்சினை

ஆராக்காத லவிர்தளிர் பரப்பிப்

புலவர் புகழ்ந்த நாரில் பெருமரம்

நிலவரை யெல்லா நிழற்றி

அலரரும் பூழ்ப்பவும் வாரா தோரே" (அகம் 273)

என்ற பாடலின் "பெண்களாகிய நம் உலகமே இத்தனை ஆண்கள் உலகத்தினின்று வேறுபட்டு மேலும் நம்மனத்தின் மென்மை அவர்களுக்கு கிடையாது (Sadasiva Iyer, 1999). அதனால் நம் மனதை (பெண்கள் மல உலகம்) அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை என்ற பதிவில் மூலம் அலர் பரவிவிட்டதை கூறுவதே ஒரு விதத்தில் தலைவியின் பிரிவு வருத்தத்தையும் அதே சமயம் பெண்ணின் இயல்பும் சுட்டப்படுகிறது. இங்கு 'மென்மை' என்பது 'இரக்கம்' என்ற பொருளிலியே அவ்வை கையாளுவது சிந்தனைக்குரியது.

சிறப்பு மிகுந்து விளங்கும் தலைவனின் புகழை சிறந்து பாடுவது என்பதும் அவனை புகழ்வதும் இயல்பானதாகும்.

"அகவன் மகளே! அகவன் மகளே

மனவு கோப்பன்ன நன்நெடுங்கூந்தன்

அகவன் மகளே! பாடு கபாட்டே!

இன்றும் பாடுக பாட்டே அவர்

நல்நெடுங்குன்றம் பாடிய பாட்டே!" (குறு -23)

அதற்கு அவள் உடன்படமாட்டாள் என்று கூறாதிருந்த காலத்தில் இருவரிடத்தும் தோன்றிய மாறுபாட்டினால் தலைவியின் நெஞ்சம் நல்லபாம்பு கடித்ததனால் வருந்துவதைப் போல கலக்கத்தை அடைந்துள்ளது (Nagarajan, 2017).

"பூசல் நல்லார்க் கதுவியாங்கென்

அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே " (குறு -43)

தலைவி தலைவன் நினைவில் அவனையே எண்ணி கொடியிடத்து உள்ள கனியை கெண்டை மீன் கௌவுவது போல பற்றினாள் (Nagarajan, 2017). அஞ்சியின் அச்சத்தைத் தரும் போர்களத்தில் உள்ள இரவை என்னும் ஊரில் உள்ளார் போல தலைவி துயிலும் நாட்களும் சிலவே,

"கடும்பகட் டியானை நெடுந்தெ ரஞ்சிக்

கொன்முனை இரவூர் போலக்

சிலவாகுகநீ துஞ்சு நாளே" (குறு -91)

தலைவியின் காமநோயானது உயர்ந்த மரத்தினது கிளையைத் தொட்டுப் பெருகி ஓடும் வெள்ளத்தைப் போன்றதாகும் (Nagarajan, 2017).

"நீடிய மாஅத்த கோடுநோய் மலிர்சிறை

இறைத் துணை கென்றற் றாஅங்கு" (குறு- 99)

தோழி நினைப்பால் நெஞ்சம் வெந்திடும் நினையாமல் அவ்வுள்ளம் எம்மிடம் இருக்காது அத்தகைய உயர்வுடைய தலைவன் மீது தலைவி கொண்டுள்ள காமம் வானைக் காட்டிலும் உயர்ந்தது என்பதை

"உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது

இருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி

வான்றோய் வற்றே காமம்" (குறு-102)

குறுந்தொகைப் பாடல் வாயிலாக அறியலாகியது (Nagarajan, 2017).

முடிவுகள்

அகப்பாடல்கள் பிரிந்த தலைமகன் திரும்பாமை பற்றி அதிகம் பேசுகின்றன. பிரிவால் வாடும் தலைவியின் வருத்தமும் ஏமாற்றமுற்ற காதல் வேட்கையின் நிறைவேறா உணர்வுகளாக உணர்வுகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. காம பெண்கள் சமூக ரீதியில் ஆற்றல் குறைந்தவர்கள் என்ற கருத்து சங்கச் சமூகத்தில் காணப்படவில்லை. இயற்கையும் மானுடமும் இயைந்து காணப்படுவதால் ஆண் பெண் 'பால்நிலை' குறித்த காம உணர்வை அவ்வை இயற்கைக்கு உரியதாகவே பதிவு செய்கிறார். அவ்வையின் பார்வையில் பெண்ணின் மன உலகு தனி என்பதும் அவ்வுலகு ஆண்களால் அறியப்படாத ஒன்றாகவே அமைந்துள்ளது என்றும் பெண் மனநிலைகுறித்து பதிவு செய்கிறார். பெண்ணின் காமத்து இயல்பை எடுத்துரைக்கையில் ஐம்புலன்களாலும் நுகரப்படுவது காமத்து இன்பம் என்ற பதிவில் பெண்ணின் காம உணர்வு இயற்கையானது இயல்பானது என்ற பதிவை இனங்காண முடிகிறது. மேலும் காமத்து இன்பம் விசும்பை முட்டும் பெருக்குடையது. அவ்வியல்பால் உடலின் தன்மையும் உயிரின் தன்மையும் வேறுபடும் என்றும் பதிவு செய்கிறார்.

References

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Nagarajan, V. (2017) Kurunthogai Mulamum Uraiyum, Sixth Edition, New Century Book House, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Sadasiva Iyer, T., (1999), Ainkurunuru Source and text, International Institute of Tamil Studies, Chennai, India.

Seenivasan, R. (2000) Seevaga Sinthamani, Aniyagam, Chennai, India

Sellappan, S. (1994) Silapathikaram, Bharathi Pathippagam, Chennai, India

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

Cite this Article

M. Sindhu, Women's Voices and Emotional Experiences in the Akam Poems of Sangam Avvai, Indian Journal of Multilingual Research and Development, Vol 7, Iss 4, (2026) 1-4. DOI: https://doi.org/10.54392/ijmrd2641